**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, PERAMBALUR.**

## SPL.CC.17/2025

**P.W-3 சுப்ரமணியன்** **Dated.06.03.2026**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பு குறுக்குவிசாரணை தொடர்ச்சி:**

Demand Noticeஐ ஆய்வாளரிடம் A.E கருணாநிதி என்பவரிடம் கொடுத்தார். அப்போது மணி என்ன என்று எனக்கு சரியாக ஞாபகமில்லை. நான் கூறுவது போன்று என்முன்னிலையில் அம்மாதிரி சம்பவம் நடக்கவில்லை என்பதால் தான் நேரம் ஞாபகமில்லை என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல. எதிரி தயார் செய்த Estimate Reportஐ நான் பார்த்தேனா என்றால் ஞாபகமில்லை. Estimate Report ஆய்வாளர் கைப்பற்றினாரா என்றால் எனக்கு ஞாபகமில்லை. உண்மையில் நான் சம்பவ இடத்தில் இல்லையென்பதால் தான் ஞாபகமில்லை என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல. ஆய்வாளர் சம்பவஇடத்தில் Attendance Register, Casual Leave Register, Proposal Register, Work Allotment Register மற்றும் மீதி கைப்பற்றிய Register எனக்கு ஞாபகமில்லை. ஒவ்வொரு Registerமும் எத்தனை பக்கங்கள் என்று என்னால் கூறஇயலாது. போலிசார் விசாரணையில் நான் ஒவ்வொரு Registerமும் எத்தனை பக்கங்கள் என்று சொன்னேன் என்றால் சரியல்ல. ஆய்வாளர் Proposal Registerஐ கைப்பற்றினார். எதிரி ஏற்கனவே Estimate தயார் செய்து Proposal Registerல் பதிவுசெய்து உதவி செயற்பொறியாளரிடம் 11.06.2020ம் தேதி சமர்பித்து விட்டார் என்ற விவரத்தை நான் தெரிந்துகொண்டேனா என்றால் நான் Register ஐ படிக்கவில்லை. கைப்பற்றிய Registerகளை நான் படிக்கவில்லை. அதனுடைய சாராம்சங்கள் என்ன என்று எனக்கு தெரியாது. எதிரி அனுப்பிய கோப்பினை உதவி செயற்பொறியாளர் 22.06.2020ம் தேதி Sanction செய்துவிட்டார் என்ற விவரத்தை நான் தெரிந்துகொண்டேனா என்றால் எனக்கு தெரியாது. அந்த மாதிரி Sanction வந்தால் அதை Demand Notice அடிப்படையில் தயார் செய்வார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. Demand Noticeஐ யார் தயார் செய்வார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. Demand Noticeல் எவ்வளவு தொகை

காட்டப்பட்டிருந்தது என்று எனக்கு ஞாபகமில்லை. உண்மையில் நான் Demand Noticeஐ பார்க்காததலும், படிக்காததாலும் தான் தற்போது ஞாபகமில்லை என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல. Demand Noticeல் எத்தனை கையெழுத்துக்கள் இருந்தது என்று எனக்கு தெரியாது. மின்சார வாரிய அலுவலகத்தில் ரூ.10ஆயிரத்திற்கு மேற்பட்ட தொகையை கேட்புவரைவோலைமூலம் செலுத்தவேண்டும் மற்றும் ரூ.10ஆயிரத்துக்கு குறைவான பணத்தை தான் ரொக்கமாக செலுத்தமுடியும் என்ற விவரம் எனக்கு தெரியாது. புகார்தாரர் அந்த சமயத்தில் Demand Notice படி ரூ.8,419/– செலுத்தவேண்டியிருந்தது என்ற விவரம் எனக்கு ஞாபகமில்லை. ஆறுமுகத்தின் தந்தை வீரமுத்துதான் 3 Phase மின்இணைப்பு கேட்டு விண்ணப்பித்திருந்தார் என்றால் எனக்கு ஞாபகமில்லை. புகார்தாரர் ஆறுமுகத்துக்கு சொந்தமாக நிலம் கிடையாது என்றால் எனக்கு ஞாபகமில்லை. புகார்தாரர் எந்தவொரு விண்ணப்பத்தையும் எதிரியின் அலுவலகத்தில் கொடுக்கவில்லை என்றால் எனக்கு தெரியாது. மின்இணைப்பு சம்மந்தப்பட்ட எந்தவொரு ஆவணத்திலும் புகார்தாரர் ஆறுமுகத்தின் கையெழுத்தை பார்த்தேனா என்று எனக்கு ஞாபகமில்லை. 24.06.2020ம்தேதி ஆறுமுகத்தின் வீட்டில் அவருடைய குடும்ப உறுப்பினர்கள் நான் பார்க்கவில்லை. ஆறுமுகத்தின் செல்போன் எண் எனக்கு தெரியாது. அவரை எப்போது நான் தொடர்பு கொண்டது கிடையாது. 24.06.2020ம் தேதி ஆறுமுகம் Deposit Cash மற்றும் Estimate Amount இரண்டையும் சேர்த்து ரூ.20000/– எடுத்துவந்ததாரா என்று எனக்கு ஞாபகமில்லை. ஒப்படைப்பு மகசரில் ரூ.20000/– என்றுஎழுதினார்களா என்றால் ரூ.20000/– என்று எனக்கு தெரியாது, ஆனால், ரூபாய் நோட்டுகளின் எண்களை எழுதினார்கள். போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க என்னவென்று தெரியாமல் கையெழுத்து போட்டதால்தான் மேற்படி விவரம் தெரியாது என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல. அந்த எண்கள் என்ன என்று எனக்கு தெரியாது. சம்பவநாளில், சம்பவஇடமான மின்சாரவாரிய அலுவலத்தில் சுமார் 4 மணிநேரம் இருந்தேன். மாலை சுமார் 04.00 மணிமுதல் 07.00 மணி வரை இருந்தேன். ஆய்வாளர்

தயாரித்த வரைபடத்தில் கையெழுத்து செய்தேனா என்றால் கையெழுத்து செய்தேன். அதில் எதிரி பக்கத்தில் ஒரு நாற்காலியும், ஒருகம்யூட்டர் மேசையும் காட்டப்பட்டிருந்ததா என்று எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் மாதிரிவரைபடத்தின் எதிரியின் இருக்கைக்கு அருகே காட்டப்பட்டுள்ள கணினி மேசையில் உட்கார்ந்திருந்த நபர் யார் என்றால் எனக்கு ஞாபகமில்லை. அது ஆணா, பெண்ணா என்று சொல்லமுடியுமா என்றால் டேபிள் இருந்ததே எனக்கு ஞாபகமில்லை. எதிரியின் டேபிளுக்கும் அருகில் உள்ள டேபிளுக்கும் நடுவில் எந்த தடுப்பும் இல்லையென்றால் எனக்கு ஞாபகமில்லை. உண்மையில் நான் சம்பவஇடத்திற்கு போகாததால் தான் இவ்வாறு கூறுகிறேன் என்றால் சரியல்ல. கணக்கீட்டாளர் மற்றும் கணக்கீட்டு ஆய்வாளர் என்று அருகில் உள்ள டேபிளை ஒட்டியுள்ள சுவற்றில் எழுதப்பட்டிருந்ததா என்று எனக்கு ஞாபகமில்லை. சம்பவம் நடைபெற்றுகொண்டிருக்கும்போது கதவு உள்பக்கமாக மூடிப்பட்டிருந்தது. நடந்ததாக சொல்லப்படும் சம்பவத்தை பொதுமக்கள் யாரும் வேடிக்கை பார்க்கவில்லை. அந்த அலுவலகத்தைசேர்ந்தவர்கள் உள்ளே இருந்தவர்கள் மொத்தம் எத்தனை பேர்கள் வேடிக்கை பார்த்தார்கள் என்று என்னால் கூறுஇயலாது. சுமாராக கூறஇயலாது. உண்மையில் நான் அங்கிருந்திருந்தால் இந்த விவரத்தை கூறமுடியும் என்றும், அங்கில்லாததாலும் பொய்யாக சாட்சியம் அளிப்பதால் தான் இந்த விவரத்தை கூறஇயலவில்லை என்றால் சரியல்ல. சம்பவஇடத்தில் மொத்தம் எத்தனை போலிசார் இருந்தார்கள் என்று ஞாபகமில்லை. சுமாராக எத்தனை பேர்கள் இருந்தார்கள் என்று ஞாபகமில்லை. இன்ஸ்பெக்டர், மனோகரன் என்ற அதிகாரி இருந்தது ஞபாகமுள்ளது. சுலோச்சனா மற்றும் ரத்தினவள்ளி இருந்தார்களா என்றால் ரத்தினவள்ளி இருந்தார். சம்பவஇடத்திற்கு உள்ளுர் காவல் ஆய்வாளர் வந்தாரா என்று எனக்கு ஞாபகமில்லை. சம்பவம் நடக்கும்போது லஞ்சஒழிப்பு ஆய்வாளர் வெளியே செல்லவில்லை. சுமார் 07.00 மணிவரை அவர் வெளியே செல்லவில்லை. சுமார் 07.00மணிக்கு பின்னர் லஞ்சஒழிப்பு அலுவலகத்திற்கு

சென்றுவிட்டோம். லஞ்சஒழிப்பு அலுவகத்திற்கு செல்லும்போது சுமார் 08.00 மணிஇருக்கும். லஞ்சஒழிப்பு அலுவலகத்தில் என்னென்ன ஆவணங்கள் தயார் செய்யப்பட்டது என்று எனக்கு ஞாபகமில்லை. லஞ்சஒழிப்பு அலுவலகத்தில் ஆவணங்களில் கையெழுத்து செய்தேன். எத்தனை ஆவணங்களில் கையெழுத்து செய்தேன் என்று ஞாபகமில்லை. எதிரியிடம் ஆய்வாளர் விசாரித்து பதிவுசெய்ததாக சொல்லப்படும் வாக்குமூலம் பதிவுசெய்ய எவ்வளவு நேரம் ஆனது என்று எனக்கு ஞாபகமில்லை. அந்த வாக்குமூலத்தில் யார் யார் கையெழுத்து செய்தார்கள் என்று எனக்கு ஞாபகமில்லை. ஆறுமுகம் என்னை விட்டு எப்போது பிரிந்து சென்றார் என்றால் அவர் எதிரியிடம் பணம் கொடுத்தபின்னர் நானும், அவரும் வெளியே வந்துவிட்டோம். அதன்பிறகு நான் அவரை பார்க்கவில்லை. அதன்பின்னர் ஆறுமுகத்தை இதுவரை பார்க்கவில்லை. சம்பவஇடத்தில் மகசர், வாக்குமூலம் யார் தட்டச்சு செய்தார்கள் என்று எனக்கு ஞாபகமில்லை. எழுதப்பட்ட ஆவணங்களை யார் தயார் செய்தார்கள் என்று எனக்கு ஞாபகமில்லை. அதை தயார் செய்ததை பார்த்தேன். யாரால் எதை தயார் செய்தார்கள் என்று எனக்கு ஞாபகமில்லை. சம்பவம் நடந்த கிழமை ஞாபகமில்லை. அன்றைய தினம் எதிரியின் வீடு சோதனை செய்யப்பட்டதா என்றால் இல்லை. எதிரியின் வீடு எங்குள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது. அன்றையதினம் நான் 08.30 மணியளவில் நான் வீட்டிற்கு புறப்பட்டு சென்றுவிட்டேன். அதன்பின்னர் அன்று நான் அலுவலகம் செல்லவில்லை. 29.06.2020ம் தேதி வேலைமுடிந்தது என்று எழுத்துபூர்வமான அறிக்கை எதையும் என்னுடைய உயர்அதிகாரிகளுக்கு நான் அனுப்பவில்லை. 29.06.2020ம் தேதி நடந்த விவரங்கள் குறித்து என்னுடைய அலுவலக ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் என்னுடைய டைரியில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த டைரியை ஆய்வாளர் என்னிடம் கேட்டுவாங்கவில்லை. எதிரியிடமிருந்து செல்போன், ஐடி கார்டு, பணம், நகை ஆகியவற்றை கைப்பற்றினார்களா என்றால் கொஞ்சம் பணம் கைப்பற்றினார்கள். எவ்வளவு என்று தெரியாது. மற்ற எதையும் கைப்பற்றினாரார்களா என்று

எனக்கு ஞாபகமில்லை. லஞ்சஒழிப்பு ஆய்வாளர் சுலோச்சனா 09.02.2021ம் தேதி விசாரித்தார். விசாரணைக்கு வாருங்கள் என்று எனக்கு அழைப்பாணை அனுப்பவில்லை. ஆய்வாளர் சுலோச்சனா என்னை விசாரிக்கும்போது ரத்தினவள்ளி இருந்தரா என்று எனக்கு ஞாபகமில்லை. என்னை லஞ்சஒழிப்பு அலுவலகத்தில் வைத்து விசாரித்தார் நேரம் ஞாபகமில்லை. செல்போன் மூலம் என்னை அழைத்தார். அவ்வாறு அழைத்தது மனோகரனா என்று எனக்கு ஞாபகமில்லை. என்னை சுமார் 2, 3 மணிநேரம் விசாரித்தார். அவ்வாறு விசாரிப்பதற்காக செல்லும்போது உயர்அதிகாரியிடம் எழுத்துபூர்வமாக அனுமதி வாங்கவில்லை, வாய்மொழியாக சொன்னேன். அம்மாதிரி அனுமதி வாங்கி வந்ததாக ஆய்வாளரிடம் நான் சொல்லவில்லை. நான் சொல்ல சொல்ல டைப் செய்தார்கள். அவ்வாறு நான் சொல்ல சொல்ல ரூபாய் நோட்டுகளின் எண்களை டைப்செய்தார்களா என்று எனக்கு ஞாபகமில்லை. என்னிடம் காட்டப்படும் என்னுடைய விசாரணை வாக்குமூலத்தில் மொத்தம் 13 ரூபாய் நோட்டுகளின் எண்கள் டைப்செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். Case Historyஐ படிக்க கொடுத்திருந்தார்கள் அதை பார்த்து நான் ரூபாய் நோட்டுகளின் எண்களை சொன்னேன். அந்த நேரத்தில் என்னிடம் ஒப்படைப்பு மகசரை கொடுத்தார்களா என்று எனக்கு ஞாபகமில்லை. வேறு என்னென்ன ஆவணங்களை நான் படித்துபார்த்தேன் என்று எனக்கு ஞாபகமில்லை. Case Historyஐ யார் கொடுத்தார்கள் என்றால் என்னுடைய தேவைக்காக விவரங்களை ரத்தினவள்ளி கொடுத்திருந்தார். சம்பவம் நடந்து முடிந்த பின்னர் சுமார் 2, 3 மாதங்கள் கழித்து என்னிடம் கொடுத்தார். அவருடைய அலுவலகத்திற்கு ஒருமுறை நான் சென்றபோது கொடுத்தார். இந்த வழக்கு சம்மந்தமாக போயிருக்கும்போது கொடுத்தார். அப்போது எங்கள் துறையில் அனுமதி வாங்கினேனா என்றால் சொல்லிவிட்டு சென்றேன். அன்றையதினம் என்னிடம் வாக்குமூலம் வாங்கவில்லை. அப்போது இந்த வழக்கு சம்மந்தப்பட்ட வேறு யாரும் அங்கில்லை. இந்த வழக்கு சம்மந்தமாக மொத்தம் எத்தனை முறை பெரம்பலூர்

லஞ்சஒழிப்பு அலுவகத்திற்கு சென்றேன் என்று எனக்கு ஞாபகமில்லை. காமராஜ் என்பவரின் விண்ணப்ப எண் என்னவென்று எனக்கு தெரியாது. அவர் பெயரில் ஒரு Application இருந்ததாக ஞாபகம். ஆய்வாளர் விசாரிக்கும்போது காமராஜ் Application நம்பர் சொன்னேன் என்றால் எனக்கு ஞாபகமில்லை. என்னிடம் காட்டப்படும் விசாரணை வாக்குமூலத்தில் Application எண் உள்ளது. சம்பவடம் நடந்து 6மாதங்களுக்கு பின்னிட்டு நடந்த விசாரணையின் போது பல்வேறு எண்களையும், ரூபாய் நோட்டு எண்களையும், பல்வேறு Registerகளின் பக்கங்களையும் Application எண்களையும் எவ்வாறு சொன்னேன் என்று ஞாபகமில்லை. எந்த ஆவணத்தை பார்த்து சொன்னேன் என்று ஞாபகமில்லை. யார்மூலம் தெரிந்துகொண்டேன் என்று ஞாபகமில்லை. என்னுடைய விசாரணை வாக்குமூலம் நகல் என்னிடம் கொடுக்கப்படவில்லை. என்னிடம் கையெழுத்து வாங்கியது போன்று ஞாபகமுள்ளது. வனத்துறை வழக்குகளில் பலவழக்குகளில் நான் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் 1, 2 வழக்குகளில் சாட்சியம் அளித்துள்ளேன். வனத்துறை வழக்குகளை கையாலும் நீதிமன்ற பணியை நான் கவனித்து வந்தேன் என்றால் அவ்வப்போது நீதிமன்றம் போவேன். நீதிமன்ற நடவடிக்கை மற்றும் குற்றவியல் நடவடிக்கையில் நான் நிபுணத்துவம் பெற்ற நபர் என்பதால் லஞ்சஒழிப்பு போலிசார் இந்த வழக்கில் என்னை சாட்சியாக சேர்த்துள்ளார்கள் என்றால் சரியல்ல. 24.06.2020 மற்றும் 29.06.2020 ஆகிய தேதிகளில் லஞ்சஒழிப்பு எந்த ஆய்வாளரின் சென்றேன் மற்றும் செயல்பட்டேன் என்றால் ரத்தினவள்ளி ஆய்வாளர் சொன்னப்படி சென்றேன், செயல்பட்டேன். 24.06.2020 தேதிமுதல் எப்போது அழைத்தாலும் சாட்சியாக செல்லும் தயார் நிலையில் நான் இருந்தேன் என்றால் சரிதான். சம்பவஇடத்தில் எடுக்கப்பட்ட வீடியோ யார் கட்டுப்பாட்டில் இருந்தது என்று எனக்கு ஞாபகமில்லை. ரசாயனத்தின் கலர்மாற்றம் ஏற்படாததால் அந்த வீடியோவை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் கூறுவது போன்று எதிரி எந்த வாக்குமூலமும் கொடுக்கவில்லை, அவரிடமிருந்து எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றும், சம்பவஇடத்தில் வைத்து எந்த ஆவணமும்

தயார் செய்யப்படவில்லை என்றும், காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்ட ஆவணங்களில் பின்னிட்டு நானும், ராதாவும் கையெழுத்து செய்தோம் என்றால் சரியல்ல. போலிசார் பதிவுசெய்த வாக்குமூலத்தில் என்ன எழுதப்பட்டுள்ளதோ அதேமாதிரி நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கவேண்டும் என்றும், தவறினால் துறைரீதியான நடவடிக்கை எடுப்பார்கள் என்ற சூழ்நிலையில் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலிசார் தயார் செய்த விசாரணை வாக்குமூலத்தை நான் படித்துபார்த்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் போலிசாரால் உருவாக்கப்பட்ட பொய்யான சாட்சி என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:</u>**

இல்லை.

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.